*2*

# புதிய ஜீவனில் வியத்தகு மாற்றங்கள்

## (எபேசியர் 4–6)

*"மனமாற்றம்" எனும் வினைச்சொல் ஒரு திசையிலிருந்து மற்றொரு திசைக்கு மாறுதல் எனும் பதத்திலிருந்து வருவதாகும். ஒருவர் தனது முந்தின நிலைமைக்குத் திரும்புதல் எனும் கருத்தையும் இந்த வார்த்தையின் பயன்பாட்டில் பேசப்படும். நடபடிகள் 3:19 மனமாற்றம் என்பது மனந்திரும்புதலில் துவங்கி அதன் நிறைவு பலனாக "... கர்த்தருடைய சந்நிதானத்தில் இளைப்பாறுதலின் காலங்கள் ..." வரும் என்று விவரிக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படிவோரின் பகுதியில் மனந்திரும்புதல் தேவை என்பதை சுவிசேஷம் கோருகின்றது. ஒருவர் வெறும் சுவிசேஷப் பிரசங்கத்தை மட்டும் கேட்டு விட்டு தேவனோடு ஐக்கியமாயிருக்க முடியாது. அவர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவிக்க விரும்பினால், சுவிசேஷச் செய்திக்கு அவர் எதிர்கிரியைச் செய்து கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். ஒருவர் கேள்விப்பட்டு (கேட்டு) விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று தண்ணீர் முழுக்கிலே கட்டளைக்கு கீழ்ப்படிவதன் மூலம் "புதிய ஜீவனுள்ளவராக" ஆசீர்வதிக்கப்படுகிறார் (ரோமர் 6:4ஆ).*

*கி.பி. 150 வாக்கில் வாழ்ந்த ஜஸ்டின் மார்டிர் என்பவரால், பின்வரும் வார்த்தைகள் எழுதப்பட்டன. அவரது விவாதம் ஒருவர் மனமாற்றப் படும்போது இடம் பெறும் மாற்றத்தின் சான்றுகள் எனக் காட்டுகிறார்:*

> *இப்படி நாமும், வார்த்தையினால் சம்மதிக்கப் பண்ணப்பட்டதால், அப்படியே செய்கிறோம், ... பிறப்பிக்கப்படாத தேவனை அவருடைய குமாரன் மூலமாய் பின்பற்றுகிறோம் - முன்னே வேசித்தனத்தில் பிரியப்பட்ட நாம், இப்பொழுது சிட்சையை மட்டும் தழுவிக் கொண்டிருக்கிறோம்; முன்பு மாய வித்தைகளை பயன்படுத்தினவர்களாகிய நாம், இப்பொழுது நம்மை ... தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறோம்; எல்லாவற்றுக்கும் மேலாக நமது ஆஸ்திகளையும் சொத்துக்களையும், அடைந்திருந்த நாம், இப்பொழுது நாம் நம்மிடத்தில் உள்ளவைகளை கொண்டு வந்து ... தேவையுடைய ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக் [கொடுக்] கிறோம்; ஒருவரையொருவர் பகைத்து பட்சித்துப் போட்ட நாம், அவர்களுடைய வித்தியாசப்பட்ட நடத்தைகள் காரணமாக வித்தியாசப்பட்ட குலகோத்திரங்களோடு நாம் வாழ விரும்பியதில்லை, இப்பொழுதோ, கிறிஸ்துவின் வருகையினால், அவர்களோடு பிரசித்தமாய் வாழ்கிறோம், நம்முடைய சத்துருக்களுக்காக ஜெபிக்கிறோம், அநியாயமாய் நம்மைப் பகைப்பவர்களை கிறிஸ்துவின்*

> நல்ல சட்டதிட்டங்களின்படி மாற்றம் பெற்ற வாழ்க்கையை வாழவைக்க கடுமையாய்ப் பிரயாசப் படுகிறோம், முடிவு பரியந்தம் நம்மோடு கூட ஐக்கியத்தில் பங்கு பெறுகிறவர்களாய் அவர்களும் மாறி அதே ஆனந்தமான பிரதிபலனை எல்லாரையும் ஆளுகை செய்கிற தேவனிடத்திலிருந்து பெறும் நம்பிக்கை கொண்டவர்களாவார்கள்.[1]

*1 தெசலோனிக்கேயர் 1:9லும் நடபடிகள் 14:15லும் மனமாற்றம் என்பது விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தனிநபரும் தங்களுடைய மனமாற்றத்தை விளங்கப் பண்ணி அவர்களுடைய அடிப்படை வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் மனந்திரும்பி (அவர்களுடைய நினைவுகளின் வழிகளை மாற்றி) தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்படித் திரும்புகிறார்கள். அவர்களின் மாறிய நினைவுகள் செயல்களில் மாற்றத்தைக் கொண்டு வருகிறது! இந்த மாற்றத்திற்கான சாட்சியத்தை வசனங்கள் "மனந்திரும்புதலுக்கேற்ற கனி" அல்லது "நீதியின் கனி" என்று குறிப்பிடுகின்றன (மத்தேயு 3:8; பிலிப்பியர் 1:11; காண்க மத்தேயு 7:16, 20; 2 கொரிந்தியர் 9:10).*

*மெய்யான மனமாற்றத்தில் நிகழுகிற வியப்புமிகுந்த மாற்றங்களை பவுல் விளக்கப்படுத்தினார். நடபடிகள் 9 சவுல் கிறிஸ்துவிடத்தில் மனமாற்றப்பட்டதை விளக்குகிறது. சவுலுக்கு அனனியா சுவிசேஷத்தைப் போதித்தார். சவுல் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார் (நடபடிகள் 22:4-16). சவுல் கிறிஸ்தவனாவதற்குமுன், அவர் கர்த்தருடைய சபையை கொடுமையாய்த் துன்புறுத்துகிறவராய் இருந்தார் (நடபடிகள் 9:1, 2). சவுலின் மன மாற்றத்துக்குப் பின்பு "தாமதமின்றி இயேசுவை ஜெப ஆலயங்களில் பிரசங்கித்து, அவரைத் தேவனுடைய குமாரன்" என்று சொன்னார் (நடபடிகள் 9:20). மற்றவர்கள் இந்த மாற்றத்தைக் கவனித்தார்கள்: "கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு, எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டு போகும்படி வந்தவன் இவனல்லவா என்றார்கள்?" (நடபடிகள் 9:21). இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பதால் நீங்கள் தரிசுப் பட்டணத்தானாகிய சவுலைப் போலவே வியத்தகு மாற்றத்தால் அடையாளப்படுத்தப்படுவீர்கள்.*

*எபேசியர் 1 முதல் 3ம் அதிகாரம் வரை மனமாற்ற செயல்முறையை விவரிக்கிறது. ஒருவர் இந்தப் படிகளை கடந்துபோன பின், அவர் தரிசுப் பட்டணத்தானாகிய சவுலைப்போல இருப்பார்; அதாவது, அவருடைய வாழ்க்கை மனமாற்றத்துக்குப் பின்பு குறிப்பிடத் தக்க வித்தியாசம் மனமாற்றத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் இருக்கும். இந்த வெளிப்படையான மனமாற்றத்துக்குப் பின்பு ஒரு சிறப்பு வாய்ந்த மனமாற்ற மாற்றம் எபேசியர் 4 முதல் 6ல் விவரிக்கப்படுகிறது. இந்தப் பாடம் இந்த அதி காரங்களை ஆராய்ச்சி செய்து ஒருவர் கிறிஸ்தவனாகும்போது அவரது வாழ்க்கை முறையில் முழுமையாக ஏற்படும் மாற்றங்களை பெரு விரல் நூனியில் படம் பிடித்துக் காட்டுகிறது.*

## தேவனுடைய முதல் முக்கியத்துவங்களைப் பிரதி பலிக்கும் இலக்கு (4:1-16)

*முதல் மாற்றங்களில் ஒன்று மனமாற்றப்படுபவரின் வாழ்க்கை இலக்கில் ஏற்படும் மாற்றம். வெற்றி, அந்தஸ்து, சொத்து, பெருமை, இன்னும் உலகத்தின் மற்ற இலக்குகள் கிறிஸ்தவரல்லாதவர்கள் பின்பற்றும் பாதைகளைக் கட்டளையிடுகின்றன. மனமாற்றத்துக்கு முன்பு நீங்கள் உலகக் காரியத்தினால் பட்சிக்கப் பட்டிருக்கலாம். நீங்கள் தேவனுடைய முதல் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்ளும்போது, பழைய இலக்குகள் எல்லாம் மறக்கப்படுகின்றன.*

*சுயமானது என்ன விரும்புகிறது என்று பாராமல், தேவன் எதை விரும்புகிறார் என்பதில் கிறிஸ்தவன் ஆர்வமுள்ளவனாக மாறுகிறான் (கலாத்தியர் 2:20; 6:14). எபேசியர் 4:1-16 இந்த வியத்தகு மாற்றத்தை விவரிக்கிறது. புதிய கிறிஸ்தவன் கிறிஸ்தவர்களுக்குள்ளாக ஐக்கியத்தை ஊக்கப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறான் என்று திருமறை சொல்லுகிறது (வசனங்கள் 1-6) மேலும் சபையை பெலப்படுத்துவதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான் (வசனங்கள் 11-16).*

*ஒரு நபர் ஒரு காலத்தில் தனக்கென வேலை செய்வதில் தன்னை அர்ப்பணித்திருந்தவன், இப்பொழுது தேவனுடைய திட்டங்களை ஆர்வமாக சாதிப்பதிலே அக்கரை காட்டுகிறான் என்பதைக் காண்பது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது! மனமாற்றத்துக்கு முன்பு, சுயநலம் கசப்பான காரியங்களுக்கும் பிரிவினைகளுக்கும் நடத்தியது; ஆனால் இப்போது, சுயத்தை தியாகம் பண்ணி நேர்மையாக சமாதானத்தையும் ஐக்கியத்தையும் தேடுகிறது!*

## ஒருவரது பெலத்தை வெளிப்படுத்தும் நடத்தை (4:17-32)

*மனமாற்றப்பட்ட ஒருவர் தனது இலக்குகளை மாற்றிக் கொள்ளும்போது, பிறகு அவர் தனது இலக்கை அடைய தனது செயல்களையும் மாற்றிக் கொள்வார். கிறிஸ்தவர்கள் உலகத்தில் உள்ளவர்களைப் போல நடந்து கொள்ள இயலாது (வசனங்கள் 17-20). உலகத்தில் இருப்போர் தங்கள் சுயத்திற்காகவே வாழ்கிறார்கள் (''நடந்து கொள்கிறார்கள்'') ஏனெனில் அவர்களின் இருதயம் கடினப் பட்டுள்ளது. அப்படிப்பட்ட வாழ்க்கைமுறை ''இருளின்'' தன்மைகளில் ஒன்று. தங்களுக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் "பேராசைக்காரர்கள்" என்று பவுல் கூறினார். பேராசையுள்ள நபர் மற்றவர்களைக் குறித்து அக்கறை கொள்ள மாட்டான்!*

*புதிய கிறிஸ்தவனிடத்தில் வெளிப்படையாய்க் காணப்படுகிற மாற்றம் அவனது வாழ்க்கை முறையில் காணப்படுவதை வசனம் 20ல் அறிமுகப்படுத்துகிறது: ''நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளவில்லை.'' மனமாற்றம் புதிய முன்மாதிரி நடக்கையைக் கொண்டு வருகிறது. ஏன்? ஏனெனில் கிறிஸ்து என்ன விரும்புகிறார் என்பதை அறிந்து கொண்ட ஒருவர் தனது பழைய வழியில் தொடர்ந்து ஜீவிக்க இயலாது! இந்த பத்தி முழுவதும், புதிய கிறிஸ்தவனின் நடத்தை வலியுறுத்தப்படுகிறது.*

- *முடிவை எடுக்கும் புதிய செயல்முறை அங்கே காணப்படுகிறது (வசனம் 23).*

- உண்மையை பேசும்படி புதிய ஒப்புக் கொடுக்கப்பட்ட தன்மை அங்கே காணப்படுகிறது (வசனங்கள் 25-27, 29, 31).
- தனது வேலையில் ஒரு புதிய நேர்மை அங்கே காணப்படுகிறது (வசனம் 28).
- தேவனுடைய அன்பின் இரக்கத்தை விளக்கப் படுத்திக் காட்டும் புதிய ஆவல் அங்கே காணப்படுகிறது (வசனம் 32).

## பிதாவைப் போலக் காணப்படும் செல்வாக்கு (5:1-6:9)

ஒருவர் கிறிஸ்துவுக்கென்று வாழ துவங்குகையில், உடனடியாக அவர் தன்னில் உள்ள செல்வாக்கின் விளைவை அவர் கவனிக்கிறார். கிறிஸ்தவர்கள் தங்கள் செல்வாக்கில் உப்பைப் போலவும் வெளிச்சத்தைப் போலவும் வல்லமையுள்ளவர்களாயிருக்கின்றனர் (மத்தேயு 5:13, 16). விசுவாசமுள்ள கிறிஸ்தவன் தன்னில் உள்ள முன் மாதிரியைக் கண்டு மற்றவர்கள் சத்தியத்திற்கு தங்களை கீழ்ப்படியப் பண்ணுமளவிற்கு ஊக்கப் படுத்துவதை உறுதி படுத்திக் கொள்வார்கள் (கொலோசெயர் 4:2-6). தனிப்பட்ட செல்வாக்கு முக்கியமானது, மற்றும் பவுலும் "தேவனைப் பின்பற்றுகிறவர்களாகும்படி" கிறிஸ்தவர்களை அறிவுறுத்தினார் (எபேசியர் 5:1). கிறிஸ்தவர்கள், தங்கள் பிதாவாகிய தேவனை. ஒரு குழந்தை தன்னுடைய தகப்பனைப் பெருமிதத்தோடு பார்ப்பது போல, பார்க்க வேண்டும். ஒரு சிறு குழந்தை தன் தகப்பனைப் போல நடக்கவும் பேசவும் முயலுவான். ஏன்? ஏனெனில் அவன் தன் தகப்பனைக் குறித்து பெருமிதம் அடைகிறான். மற்றும் அவரைப் போலவே இருக்க விரும்புகிறான். அதே போல, புதிய கிறிஸ்தவனும் தன்னுடைய பரலோக பிதாவைப் போல இருக்க விரும்புகிறான்!

ஒழுக்கக் காரியங்களிலும் (5:3-5), நண்பர்கள் சேர்க்கையிலும் (5:6-14), வாழ்க்கையின் முன்னுரிமையிலும் (5:15-21), குடும்ப நட்புறவுகளிலும் (5:22-6:4), அல்லது வேலையில் நன்னடத்தையிலும் (6:5-9), மாற்றமில்லையெனில் நல்ல செல்வாக்குக்குரிய திராணி அழிவுண்டு போகிறது. ஒருவர் கிறிஸ்தவனாகும் போது, அவர் இன்னின்ன காரியங்களைச் செய்வதில்லை, இன்னின்ன வழிகளில் பேசுவதில்லை, அல்லது இன்னின்ன செயல்பாடுகளில் பங்கேற்பதில்லை என்று தீர்மானிக்கிறார். அப்படியொரு தீர்மானம் எடுக்க வேண்டியது ஏன்? ஏனெனில் தனிநபரின் செல்வாக்கு ஒரு சிக்கலான விஷயம், எனவே ஒரு கிறிஸ்தவன் தன்னால் இயன்றவரை சிறப்பான ஒரு செல்வாக்கை தான் கொண்டிருப்பதை நாடுகிறார் (காணவும் மத்தேயு 18:6-14; ரோமர் 14:13-21).

ஒரு கதை சொல்லப் படுவதுண்டு. அதில் மகா அலெக்ஸாந்தரின் படையில் ஒரு படைவீரன் இருந்தான், அவருடைய பெயரும் "அலெக்ஸாந்தர் தான்" - ஆனால் இந்தப் படைவீரன் ஒரு திருடனாயிருந்தான். அந்த படைவீரனுடைய செயலைக் கண்டு சினமுற்ற சக்கரவர்த்தி, "நீ ஒன்று உன்னுடைய பெயரை மாற்று அல்லது அதைக் கனப்படுத்தக் கற்றுக் கொள்!" என்று சொன்னார். சுவிசேஷத்தின் வல்லமைக்கு மாபெரும் சாட்சியங்களில் ஒன்றை எபேசியர் 5:1-6:9ல் பவுல் விவாதித்தார். கிறிஸ்தவர்களாக மாறுகிறவர்கள் தங்களுடைய வெளிவேஷத் தன்மைகளை மாற்றி சமுதாயத்தில் குறிப்பிடத் தக்க விளைவை

*ஏற்படுத்துவர்! நீங்கள் இப்பொழுது கர்த்தாதி கர்த்தருடைய நாமத்தைத் தரித்தவர், மற்றும் நீங்கள் அதைக் கனப்படுத்த வேண்டும்!*

## *தன்னுடைய பாதுகாப்பை வெளிப் படுத்தும் போராட்டங்கள் (6:5-20)*

*நீங்கள் கிறிஸ்தவராக மாறுவதால், தேவனுடைய சேனையின் பட்டியலில் சேர்க்கப்பட்டு சாத்தானுடைய சேனையை விட்டு வெளியேறுகிறீர்கள்! கிறிஸ்தவ வாழ்வு ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடுகிறது. கிறிஸ்தவர்கள் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள். தனது அடிமைத் தனத்திலிருந்து தப்பிப் போனவர்களை சாத்தான் மறுபடியும் சிறைபடுத்த என்னென்ன வழிகள் உண்டோ அதையெல்லாம் செய்வான். கிறிஸ்தவர்கள் தொடர்ந்து இந்த அபாயத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (காண்க 1 பேதுரு 5:8-10; 1 கொரிந்தியர் 15:58).*

*சாத்தான் மறுபடியும் உங்களைத் தனது அடிமைத் தனத்தில் கொண்டு போய்விடாதபடி தேவன் உங்களைப் பாதுகாக்கிறார். யுத்த வீரனுக்குரிய ஆயுதவர்க்கம் பற்றிய உருவகம் நம்முடைய ஆவிக்குரிய பாதுகாப்பை விவரிக்கிறது. எபேசியர் 6:11-17ல் "கிறிஸ்தவனுக்குரிய ஆயுதவர்க்கமாகப்" பேசப்படுகிறது ஒரு பரிச்சயமான வசனப் பகுதி.*

*நீங்கள் ஒரு யுத்தத்தில் நுழைந்துள்ளீர்கள் என்பதைக் கண்ணுறும் போது உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கக் கூடும். இதில் யாருடைய விசுவாசம் பலமாக இருக்கிறதோ அவர்கள் வெற்றி பெறுவார்கள். கிறிஸ்தவன் எண்ணங்களுக்கு எதிராகவும், முன்பு ஊக்கப் படுத்திக் கொண்டிருந்த நம்பிக்கைகள், செயல்கள் ஆகியவைகளை எதிர்த்து போராடுகிறான். இந்தக் கடமையுணர்வு ஆவிக்குரிய யுத்தத்தில் வெளிப்படும் மனமாற்றத்திற்கு ஒரு சாட்சியம்.*

## *நம்மைப் புதுப்பிக்கிற தோழமைகள் (6:21-24)*

*நீங்கள் கிறிஸ்தவராக மாறியதால், நீங்கள் நண்பர்களை மாற்றக்கூடும். கிறிஸ்தவராகிய நீங்கள், தங்கள் முன்மாதிரிகளினாலும் செல்வாக்குகளினாலும் தேவனிடத்தில் நீங்கள் விசுவாசத்தில் தொடர்ந்து தரித்திருக்க ஊக்கமளிக்கக் கூடிய தோழர்களை நீங்கள் காண்பீர்கள். கிறிஸ்துவுக்கு தங்களுடைய வாழ்க்கைகளை ஒப்புக்கொடுத்தவர்கள் தங்களுடைய மதிப்பீடுகளை பகிர்ந்து கொள்ளாதவர்களுடன் இனியும் நட்பை நீடித்திருக்க இயலாது என்பதை உணருகிறார்கள் (மத்தேயு 10:34-39).*

*நீங்கள் கிறிஸ்தவராக மாறியது உங்களைத் தேவனுடைய குடும்பத்தில் அங்கமாக்குகிறது. அதன் பலனாக கீழ்வரும் காரிய நன்மைகளை அடைகிறீர்கள்:*

*... உங்கள் வாழ்க்கையில் உள்ள உபத்திரவங்கள் வழியே உதவத்தக்க காருண்யம் (6:21அ).*

*... விசுவாசத்தில் நீங்கள் வளர உங்களுக்கு உதவுபவர்களோடுள்ள தொடர்பு (6:21ஆ).*

*... தேவனுடைய அன்பை உங்களுக்கு உறுதியளிக்கும் ஆறுதல் (6:23).*

*... கர்த்தரிடத்தில் நீங்கள் கொண்டுள்ள அன்பினிமித்தம் உங்களுக்குள்ள உறுதியான நம்பிக்கை (6:24).*

## நிறைவுறும் சிந்தனைகள்

*கிறிஸ்தவ வாழ்க்கை வியத்தகு மாற்றங்களுடன் துவங்குகிறது! கர்த்தருடைய அதிகாரத்துக்கு உண்மையான கீழ்ப்படிதலில் மனந்திரும்புதலுக்கு ஏற்ற "கனிகளை" கொடுத்தே ஆக வேண்டும் (லூக்கா 3:8). இந்த செயல் மனமாற்றம் பெறுபவரின் சிந்தனைகள், செயல்கள், மற்றும் கடமையுணர்வின் விளைவாக வருபவை.*

*பழைய ஏற்பாட்டிலுள்ள எஸ்தர் ராணியின் சரித்திரம் ஒருவர் "மனமாற்றப் படும்போது" ஏற்படும் மிகப் பெரிய மாற்றத்திற்கு ஒரு விளக்கமளிக்கும் சம்பவமாகும். துன்மார்க்கனாகிய ஆமான் எஸ்தரின் சித்தப்பாவாகிய, மொர்தேகாயை வெறுக்கிறான், எனவே மரண தண்டனையையும் தூண்டி விடுகிறான். மொர்தேகாய் நம்பிக்கையிழந்து தப்பிக்க இயலாது என்ற நிலைக்குத் தள்ளப் பட்டதாகக் கண்டது, ஆகிலும் தேவனுடைய தகுந்த ஏற்பாட்டின்படி நம்பிக்கையிழந்த தன்மை அப்படியே தலைகீழ் மாற்றம் பெற்றது. தேவனுடைய அக்கரையும் திட்டமும் செயல் பட்டதால் மொர்தேகாய் கொல்லப் படுவதற்குப் பதில் அகாஸ்வேரு ராஜாவினால் மொர்தேகாய் உயர்வைப் பெற்றான். மொர்தேகாய் தூக்கிலிடப் பட்டிருக்க வேண்டிய நாளில் வசனம் இப்படியாக பதிவு செய்யப்பட்டது: "அப்பொழுது மொர்தேகாய் இளநீலமும் வெள்ளையுமான ராஜ வஸ்திரம், பெரிய பொன் முடியும், பட்டும் இரத்தாம்பரமும் அணிந்தவனாய் ராஜாவினிடத்திலிருந்து புறப்பட்டான்; சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது" (எஸ்தர் 8:15). ஒரு நம்ப முடியாத திருப்பம் ஏற்பட்டிருந்தது. ஆக்கினைக்குள்ளாக்கப் பட்டவன் விடுதலையாக்கப் பட்டு உயர்த்தப் பட்டான். அவனுடைய வழக்கமான துணிமணிகள் அகற்றப் பட்டு இராஜ வஸ்திரம் தரிப்பிக்கப் பட்டது. எல்லாமே வித்தியாசமாயின! இந்த முற்றிலும் ஆச்சரியமான மாற்றம் ஒருவர் கிறிஸ்தவராகும் போது நிகழ்கிறது. தேவனுடைய பலத்தால் அழிவு நம்பிக்கையளிக்கும் மாற்றத்தைப் பெறுகிறது. தேவனுடைய வியப்புமிகு கிருபைக்காகவும் இரட்சிப்புக்காகவும் தேவனுக்கே நன்றி செலுத்துவோம், அது அப்படிப்பட்ட வியப்புமிக்க மாற்றத்திற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும்!*

---

*குறிப்பு*

[1]Justin Martyr *Apology I* 14.